**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 66/2025 - PW-10**

| | |
|---|---|
| Name | திரு. கோபிநாத் |
| Husband/Father Name | பாலகிருஷ்ணன் |
| Village /Area | காஞ்சிபுரம் |
| Taluk | காஞ்சிபுரம் |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 39 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.02.2026.

**(எதிரிகள் 2,3,5 ஆஜர். எதிரி 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருமால்பூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் மேற்படி அலுவலகத்தில் அதே பணியில இருந்த போது 16.01.2025 ம் தேதியில் திருமால்பூரில் வசிக்கும் ஆதிதிராவிடர் பகுதியில் வசிக்கும் பிரேம்குமார் மற்றும் 3 நபர்களுக்கும் மற்றும் பக்கத்து கிராமமான நெல்வாயை சார்ந்த தமிழரசன் என்பவருக்கிடையே நடந்த பிரச்சனை சம்மந்தமாக எனக்கு 17ம் தேதி மாலை நெமிலி காவல் நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர் பேசுவதாக கூறி போன் வந்தது. திருமால்பூர் ரயில் நிலையம் பின் பக்கம் வருமாறு என்னை அழைத்தார்கள். அப்போது நானும் என்னுடன் பணிபுரியும் உதவியாளர் ஜெயஸ்ரீ என்பவரும் அங்கு சென்றோம். அப்போது பிரேம்குமார் என்பவரை போலீசார் பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அவர் நடந்த பிரச்சனை குறித்து வாக்குமூலம் கொடுத்தார். பிரேம்குமார் என்பவர் எங்களுக்கும் பக்கத்து கிராமத்தில் வசிக்கும் தமிழரசன் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது என்றும் அப்போது தமிழரசனுடன் இருந்த ஒரு நபர் பெட்ரோல் வைத்திருந்ததாகவும் அதை பிடுங்கி தமிழரசன் மீது ஊற்றும் போது தமிழரசன் உடன் இருந்த விஜயகணபதி மீது பட்டதாகவும் பிறகு இருவருக்கும இடையே வாக்குவாதம் நடந்ததாகவும் பிரேம்குமார் தன்னிடம் இருந்த தீப்பெட்டியை எடுத்து கொளுத்தி தமிழரசன் மீது போட்டார் என்றும் அப்போது தமிழரசனும் விஜயகணபதியும் தீப்பற்றி எரிந்ததாக கூறினார். பிறகு

தீக்காயம் ஏற்பட்ட இருவரும் கத்தவே அவர்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பி விட்டதாக கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடன் பணிபுரியும் உதவியாளர் ஜெயஸ்ரீ என்பவரும் கையொப்பம் போட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பிரேம்குமாரும் கையொப்பம் இட்டார். பிரேம்குமார் தன்னிடமிருந்த பேனா கத்தியை எடுத்து போலீசாரிடம் ஆஜர் படுத்தினார். கைப்பற்றுதல் மகஜரில் நானும் என்னுடன் பணிபுரியும் உதவியாளர் ஜெயஸ்ரீ என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியை தான் போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அது **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் தற்போது திருமால்பூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறேன். நான் திருமால்பூர் கிராமத்திலேயே வீடு வாடகைக்கு எடுத்து வசித்து வருகிறேன். நான் திருமால்பூருக்கு கிராம நிர்வாக அலுவலராக ஜூலை 2024 முதல் இன்றைய தேதி வரை வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு 24 மணிநேர பணி என்று சொன்னால் சரிதான்.

வெளியே செல்ல வேண்டும் என்றால் அனுமதி பெற்று தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதால் எங்கள் கிராமத்தில் நடக்கும் பிறப்பு இறப்பு பதிவு செய்யும் பொறுப்பு என்னுடையது தான் என்று சொன்னால் சரிதான். எங்கள் கிராமத்தில் நடக்கும் குற்ற நிகழ்வுகளை பதிவு செய்ய வேண்டிய பொறுப்பும் என்னுடையது தான் என்று சொன்னால் சரிதான்.

நான் குடியிருக்கும் வாடகை வீடு திருமால்பூர் ஊரிலேயே உள்ளது. எனது அலுவலகம் காசிபாதை தெருவில் உள்ளது. அலுவலகத்துக்கும் நான் வசிக்கும் வீட்டுக்கும் உள்ள இடைப்பட்ட தொலைவு ½ கி.மீ. பனபாக்கம்–திருமால்பூர் ரோட்டிலிருந்து எனது அலுவலகம் அதே அளவு சுமார் 500மீ இருக்கும். காலை முதல் மாலை வரை எனது கிராமத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் கிராம உதவியாளரும் பொது மக்களும் எனக்கு தெரிவிப்பார்கள் என்று சொன்னால் சரிதான்.

16.01.2025 அன்று நடந்த சம்பவம் பற்றி அன்று மாலை 6.30 முதல் 7.00 மணிக்குள்ளாக எனக்கு தெரிய வந்தது. மேற்படி சம்பவம் குறித்து

வட்டாட்சியருக்கு அறிக்கை சமர்பித்தேன். நான் சம்பவத்தை பற்றி விசாணை செய்த பிறகு தான் வட்டாட்சியருக்கு அறிக்கையை சமர்பித்தேன். நான் சம்பவம் குறித்து யார் யாரிடம் விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்திலிருந்த 15 முதல் 20 பொது மக்களிடம் விசாரித்தேன். அந்த சமயத்தில் பொது மக்கள் யாரும் சம்பவத்தை பற்றி கூற முன்வராததால் மேட்டுகுடிகளிடம் விசாரித்து சம்பவத்தை பற்றி தெரிந்து கொண்டேன்.

நான் சமர்பித்த அறிக்கையில் கையொப்பமிட்ட மேட்டுகுடிகளின் பெயர்கள் யார் யார் என்றால் பெயர்களை குறிப்பிடவில்லை. நான் சுமார் ஒரு மணி நேரம் விசாரித்து அறிக்கையை சமர்பித்தேன். நான் சம்பவ இடத்துக்கு சென்று தான் விசாரித்தேன். நான் சென்று விசாரித்த சம்பவம் இடம் எது என்றால் திருமால்பூர் ஆண்கள் உயர்நிலை பள்ளியை சுற்றியுள்ள பகுதி மற்றும் வீரகசீரக நதி பகுதி மற்றும் அங்காளம்மன் கோயில் பக்கத்தில் வசிக்கும் நபர்கள் ஆகியோர்களை விசாரித்தேன்.

சம்பவ இடம் எது என்று கேட்டால் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அருகே நடந்தது. சம்பவ தினத்தன்று திருமால்பூர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி அருகே காணும் பொங்கலை முன்னிட்டு திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது சம்பவத்தின் காரணமாக அது நடைபெறவில்லை. அந்த திருவிழா காலை முதல் மாலை வரை நடைபெறுவதாக இருந்தது என்று சொன்னால் சரிதான்.

அதன் முன்னாள் மாட்டு பொங்கல் அன்று திருவிழா நடந்தது என்று சொன்னால் சரிதான். எங்கள் கிராமத்தில் எந்த நிகழ்வு நடந்தாலும் அதற்கு அனுமதி கோரி எனது மூலமாகத்தான் உயர் அதிகாரிகளை அனுகுவார்கள் என்று சொன்னால் சரிதான். காணும் பொங்கல் அன்று நான் பணியில் இல்லை. நான் அன்று மட்டும் அனுமதி பெற்றிருந்தேன்.

சம்பவம் பற்றி தகவல் தெரிந்த உடன் நான் அன்றைய தினமே மாலை கிராமத்துக்கு வந்து விட்டேன். எனக்கு சம்பவம் குறித்த தகவல் அன்று மாலை 6 முதல் 6.30 மணிக்கு கிடைத்தது. எனது கிராம உதவியாளர் தான் எனக்கு போன் மூலமாக தகவல் கூறினார். நான் தகவல் கிடைத்த ½ மணி நேரத்துக்குள் மாலை 7 மணிக்கு திருமால்பூருக்கு வந்துவிட்டேன். அதன் பிறகு தான் நான் விசாரணை செய்து அறிக்கையை வட்டாடட்சியருக்கு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான்.

நான் விசாரணை செய்ய சென்ற போது சுமார் 200 நபர்கள் சம்பவ இடத்தில் கூடி இருந்தார்கள். சம்பவ தினத்தன்று சம்பவம் குறித்து அரசியல் கட்சி சுமார் 500 நபர்கள் கூடி சாலை மறியல் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவம் மறுதினமும் பொது மக்கள் சம்பவ இடத்தில் கூடியிருந்தார்கள். அதற்கு மறுநாள் ஆர்பாட்டமும் போராட்டமும் நெமிலியில் செய்தார்கள்.

வட்டாட்சியர், DSP மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் அரசியல் கட்சி தலைவரிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். பேச்சு

வார்த்தையில் சம்பவத்திற்கு யார் காரணமானவர்கள் என்று தெரியவில்லை என்றும் அதனால் கூட்டத்தை கலைந்து போகுமாறு முடிவெடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். 17.01.2025 அன்று தான் மேற்படி பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த பேச்சு வார்த்தை காலையிலிருந்து மதியம் 3 மணி வரை பல்வேறு கட்டங்களாக நடைபெற்றது. மதியம் 3 ½ மணி அளவில் பேச்சு வார்த்தை முடிவுற்றது.

பேச்சு வார்த்தையின் போது நெமிலி காவல் ஆய்வாளர் மற்றும் அந்த நிலையத்தை சார்ந்த காவலர்கள் அனைவரும் அங்கிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். 16.01.2025 முதல் 19.01.2025 வரை காவலர்கள் தினமும் சம்பவ இடத்தில் காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி 4 நாட்கள் நானும் சம்பவ இடத்தில் காவல்துறைக்கு உதவியாக இருந்தேன் என்று சொன்னால் சரிதான்.

நான் எனது கிராம எல்லையை விட்டு வேறொரு கிராமத்துக்கு செல்ல வேண்டு என்றால் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றுவிட்டு தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். திருமால்பூர் ரயில்வே நிலையம் இருப்பது பள்ளூர் பஞ்சாயத்து என்று சொன்னால் சரிதான். அதற்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் என்று சொன்னால் சரிதான்.

மேற்படி பள்ளூர் பஞ்சாயத்துக்கு நான் செல்ல வேண்டும் என்றால் எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். எனக்கு 17ம் தேதி மாலை சுமார் 4.30 மணி அளவில் காவல் ஆய்வாளரிடமிருந்து போன் வந்தது. நானும் உதவியாளரும் தகவல் கிடைத்த 10 நிமிடத்துக்குள் கிளம்பி சம்பவ இடத்துக்கு 5 மணிக்குள் சென்று விட்டோம்.

எங்கள் அலுவலத்துக்கும் திருமால்பூர் ரயில்வே நிலையத்துக்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 4 கி.மீ. 17ம் தேதி நான் எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றேன் என்றால் வருவாய் ஆய்வாளரிடம் போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு கிளம்பினேன்.

சம்பவ இடத்துக்கு நான் சென்ற போது பள்ளூர் கிராமத்துடைய கிராம நிர்வாக அலுவலரை பார்த்தேனா என்றால் அவர் அங்கு இல்லை. சம்பவ இடத்துக்கு செல்ல போகும் விஷயத்தை மேற்படி பள்ளூர் கிராம நிர்வாக அலுவலரிடம் தெரிவித்தேனா என்றால் நாங்கள் சென்ற போது அவர் அலுவகத்தில் இல்லாததால் தகவல் சொல்லாமல் சென்று விட்டோம்.

வராஹியம்மன் கோயிலுக்கு செல்லும் வழியில் மெயின் ரோட்டை ஒட்டினார் போல் பள்ளூர் கிராம் நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளது. கிராமி நிர்வாக அலுவலர் இல்லாத காரணத்தினால் அவரது உதவியாளர் பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை.

கம்மாரபாளையம் கேட் மண் பாதை வழியாக திருமால்பூர் ரயில்வே நிலையத்துக்கு சென்றோம். முதல் எதிரியை போலீசார் விசாரித்ததில் மேற்படி ரயில்வே நிலையத்துக்கு பின் பக்கம் இருந்த வெட்டவெளியில்

தான் அங்கு மரங்களும் வீடுகளும் இருந்தது என்று சொன்னால் இல்லை.

திருமால்பூர் ரயில்வே நிலையத்தில் Up and Down track உள்ளது என்றும் அதில் எந்த இடத்தில் முதல் எதிரியை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு அந்த பகுதியை பற்றி அவ்வளவாக தெரியாது. திருமால்பூர் ரயில்வே நிலையம் 500மீ தொலைவில் உள்ளது நாங்கள் நின்றிருந்த இடத்திலிருந்து பார்க்கும் போது ரயில்நிலையம் சரியாக தெரியவில்லை காரணம் அங்கு மரங்கள் நிறைய இருந்ததால் தெரியவில்லை.

நாங்கள் நின்றிருந்த இடத்துக்கும் ரயில்வே நிலையத்துக்கும் இடத்துக்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 200மீ. முதல் எதிரியை விசாரித்த இடத்தில் எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்றால் 4 போலீசார் இருந்தார்கள், ஆங்காங்கே பொது மக்கள் இருந்தார்கள்.

முதல் எதிரியை போலீசார் விசாரிக்கும் போது மாலை 6 மணி இருக்குமா என்றால் 5.30 மணியிலிருந்து 6 மணி இருக்கும். முதல் எதிரியை ½ மணி நேரத்துக்குள் விசாரித்தார்கள். முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தது போலீசார் தான். பிறகு தலைமை காவலர் தான் பதிவு செய்ததாக கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனை பக்கங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் 2 முதல் 3 பக்கங்கள் இருக்கும்.

வாக்குமூலம் முழுவதும் மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. தலைமை காவலர் தான் அதனை தட்டச்சு செய்தார். சுமார் ½ மணி நேரம் முதல் எதிரி சொல்ல சொல்ல தட்டச்சு செய்தார். நான் பதிவு இடத்திலேயே தான் கையொப்பம் இட்டேன். பதிவு செய்ததை print எடுத்து வந்ததாக போலீசார் கூறினார்கள். பள்ளூரிலுள்ள கடையில் print எடுத்து வந்ததாக கூறினார்கள்.

நான் போலீஸ் விசாரணையில் பள்ளூர் கிராம நிர்வாக அலுவகத்துக்கு சென்ற விவரத்தை கூறினேனா என்றால் இல்லை. 16.01.2025 முதல் 19.01.2025 வரை நான் போலீசார் மற்றும் வருவாய் துறை அதிகாரிளுடன் சம்பவ இடத்தில் தான் இருந்தேன் என்றும் நான் சம்பவ இடத்துக்கோ அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக கூறப்படும் இடத்துக்கோ செல்லவில்லை என்றும் போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

பள்ளூரிலிருந்து பனப்பாக்கம் செல்லும் சாலை கிழக்கு மேற்காக உள்ளது என்று சொன்னால் சரிதான். திருமால்பூரிலிருந்து நெல்வாய்க்கு செல்லும் சாலை வடக்கு தெற்காக உள்ளது என்று சொன்னால் சரிதான். வீரகசீரக நதி கிழக்கு மேற்காக செல்கிறது என்று சொன்னால் சரிதான்.

16.01.2025 அன்று நான் அனுமதி பெற்று எனது வீட்டில் தான் இருந்தேன் நான் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை செய்ததாக கூறும் விவரசமே தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் பள்ளூர் கிராமத்துக்கு செல்வதற்கு எனது உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றதுக்கு எந்த

விதமான ஆவணமும் தாக்கல் செய்யாமல் போனில் தகவல் சொன்னாதாக கூறும் விவரமே தவறு என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.20 19:15:13 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.